| | | |
|---|---|---|
| அளவு | : | 1.40 x 1.00 x 1.7 மீட்டர் |
| கொள்திறன் | : | 80 பைகள் (1 கிலோ) |
| மகசூல் திறன் | : | 20 - 30 கிலோ ஒரு மாதத்தில் |
| கட்டுமானப் பொருட்கள் | : | இரும்பு குழாய், 40 மெஷ் நைலான் வலை, சணல்துணிகள், சிபிவிசி குழாய்கள், சிறிய நீர் தொட்டி, 30 வாட் டிசி பம்ப், நுண்துளை தெளிப்பான்கள், சூரிய மின்சார தகடுகள், மின் மாற்றி, பேட்டரி, மற்றும் நேர கட்டுப்பாட்டு கருவி. |

## 2. விலை சகாயமான நடுத்தர நிரந்தரமான காளான் வளர்க்கும் குடில்கள்



இந்த குடில் ICAR-IIHR நிறுவனத்தால் 2018-19 ஆண்டில் வடிவமைக்கப்பட்டது. இந்த குடில்கள் மூலம் முழு கொள்ளளவையும் உபயோகப்படுத்தி வளர்க்க முடியும். காளான் வளர்க்க பயன்படும் கட்டிடங்களால் ஆன பண்ணையை விட இது விலை குறைந்த அமைப்பாகும்.

| | | |
|---|---|---|
| அளவு | : | 3.0 x 3.0 x 3.5 மீட்டர் |
| கொள்திறன் | : | 350 பைகள் (1 கிலோ) /300 பைகள் (2 கிலோ) |
| மகசூல் திறன் | : | 70 - 85 கிலோ ஒரு மாதத்தில் |
| கட்டுமானப் பொருட்கள் | : | இரும்பு குழாய், 40 மெஸ் நைலான் வலை, சணல்துணிகள் |
| பயன்கள் | : | நல்ல தரமான ஆரோக்கியமான காளான் கிடைத்தல் மற்றும் குறைந்த வளர்ப்பு செலவு |

## ICAR-IIHR அமைத்த சூரிய சக்தி மற்றும் பல தர எரிபொருளால் இயங்கும் நீராவி உருவாக்கும் பாய்லர் இணைக்கப்பட்ட ஆட்டோ கிலேவ்




| | | |
|---|---|---|
| செயல் திறன் | : | 250 - 300 வைக்கோல் பைகள் (1 கிலோ) ஒரு நாளைக்கு நுண்கிருமி நீக்கம் செய்யமுடியும் |
| எரிசக்தி | : | மின்சாரம் / எல்பிஜி வாயு / மர ரிபொருள் |

## தொற்று மற்றும் பூச்சிகளைடமிருந்து காக்கும் மற்றும் தடுக்கும் வழிமுறைகள்

| காளான் வளர் நிலை | ரசாயனம் | அளவு | நோக்கம் |
|---|---|---|---|
| பை நிரப்பும் அறைக்குள் பை நிரப்ப 24 மணி நேரதிற்கு முன்பாக | பாரமல்டிஹைடு<br>குலரோதலோனில் | 20 மில்லி / 1 லி நீரில்<br>2 கி / 1 லி நீரில் | அறையில் உள்ள தொற்று கிருமிகளை நீக்குவதற்கு |
| திசு வளரும் அறையில் வாரத்திற்கு ஒரு முறை | பாரமல்டிஹைடு<br>குலரோதலோனில் | 30 மில்லி / 1 லி நீரில்<br>2 கி / 1 லி நீரில் | அறையில் உள்ள காற்று தொற்று கிருமிகள் மற்றும் பூச்சிகளை கொல்வதற்க்கு |
| காலிசெய்தல் - பைகளை காலி செய்ய 24 மணி நேரதிற்கு முன்பாக | பாரமல்டிஹைடு<br>குலரோதலோனில் | 50 மில்லி / 1 லி நீரில்<br>2 கி / 1 லி நீரில் | ஒரு மாத காளான் வளர்ப்பில் சேர்ந்த தொற்றுக்களை நீக்குவதற்கு. காளான் வளர்ந்த பின் உள்ள மூலக்கூறுகளை விலங்குகள் உணவாகவோ அல்லது பயிர் உரமாகவோ பயன் படுத்தினால் இந்த ரசாயன கலவைகள் பையில் உள்ள வைக்கோல் மூலக்கூறு மீது தெளிக்க கூடாது |
| காளான் வளர்ப்பு குடிலில் இருந்து பைகளை காலி செய்த பின்பு. அறையை மூடி வைத்து 3-4 நாட்கள் உலர விட வேண்டும் | பாரமல்டிஹைடு<br>குலரோதலோனில் | 50 மில்லி / 1 லி நீரில்<br>4 கி / 1 லி நீரில் | ஒரு மாத காளான் வளர்ப்பில் சேர்ந்த காற்று தொற்றுக்களை நீக்குவதற்கு. |

## ICAR-IIHR வடிவமைத்த காளான் மற்றும் காளான் வளர் பைகளை விற்க பயன்படும் வண்டி



- காளான் வளர்ப்பைகளில் வளர்ந்த காளானோடு இந்த வண்டியில் ஏற்றி வாடிக்கையாளர்களிடம் நேரடியாக கொண்டு சென்று விற்பனை செய்ய பயன்படுகிறது
- நைலான் வலை சுற்றிலும் பொருத்தப்பட்டுள்ளதால் பூச்சிகள் உள்ளே வராமல் தடுக்கும், காற்றோட்டத்திற்கும் உதவுகிறது.
- மேலும் தாராளமாக கிடைக்கும் கோணி துணிகளை சுற்றிலும் தொங்கவிட்டு அதை எப்போதும் நீர் ஊற்றி ஈரமாக வைத்திருப்பதன் மூலம் வண்டியின் உள்ளே ஈரப்பதத்தை தக்க வைக்க முடியும்.
- இந்த வண்டியில் 36 பைகளை (1 அல்லது 2 கிலோ) கொண்டு செல்ல முடியும்.

**ICAR-IIHR காளான் விதை உற்பத்தி சாதனங்களின் தொழில்நுட்ப விவரங்கள் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

Institute Technology Management Unit
ICAR-Indian Institute of Horticultural Research, Hessaraghatta Lake P.O.
Bengaluru – 560089 , Email : itmu.iihr@icar.gov.in
Contact No.: 080 – 23086100 , Extn.: 431

காளான் வித்துக்களை வாங்க புக்கிங் செய்யவும் மற்றும் உறுதிப்படுத்தவும் தேவையான தொலைபேசி எண்கள்

Mobile No: 7090949605, Tel. No. 080 – 23086100, Extn.: 347, 348, 349
Email: mushroomiihr@gmail.com
Website : www.iihr.res.in/mushroom

Compiled and Edited By : Dr. Chandrashekara C.
Contributors : Dr. G. Senthil Kumaran, Dr. Meera Pandey & Dr. Chandrashekara C.
Tamil Translation : Dr. G. Senthil Kumaran
Printing Funded By : AICRP on Mushroom

வெளியீடு : இயக்குனர்
ICAR - இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம்
ஹெஸரகட்டா அஞ்சல், பெங்களூர் - 560089
தொலைபேசி: 080-23086100
இமெயில்: director.iihr@icar.gov.in
வெப்சைட்: www.iihr.res.in
June 2024

EF-171-2024

# பால் காளான் மற்றும் மேக்ரோ சைப் காளான் வளர்ப்பு







காளான் ஆராய்ச்சி கூடம்
பயிர் பாதுகாப்பு பிரிவு
ICAR-இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம்

## அறிமுகம்

- பால் காளான் (கேலோசைப் இண்டிகா) பெங்காளியில் "துதிசாட்டா" என அழைக்கப்படுகிறது.
- இது மேற்குவங்க காடுகளில் இருந்து எடுத்து வரப்பட்டு உண்ணப்படும் வெப்பமண்டல காளான் வகையாகும்.
- IIHR ல் உள்ள காளான் ஆய்வகம் வைக்கோல் மூலம் இந்த காளான் வளர்க்கும் தொழில்நுட்பத்தை 1989 ல் உருவாக்கியது.
- காளான் மொட்டுக்கள் கவரக்கூடிய வெள்ளை நிறமும் மற்றும் அடர்த்தியான தண்டையும் அதோடு குடைப்பாகமும் கொண்டது. இதிலுள்ள குடைப்பாகமும் தண்டும் உண்ண கூடியது.
- சிப்பி காளான் மற்றும் மொட்டுக்காளான் ஆகியவற்றை ஒப்பிடும்போது பால் காளான் அதிக வைக்கும் காலத்தையும், பழுப்பு நிறமாகி போகாத தன்மையைக் கொண்டுள்ளது.

## மேக்ரோ சைப் காளான்

- மேக்ரோ சைப் காளான் (மேக்ரோ சைப் ஜைஜான்டியா) சித்தாபுரா மற்றும் IIHR வளாகத்தில் 2017 ல் கண்டெடுக்கப்பட்டது.
- IIHR ல் உள்ள காளான் ஆய்வகம் வைக்கோல் மூலம் இந்த காளான் வளர்க்கும் தொழில்நுட்பத்தை 2022 ல் உருவாக்கியது.
- இது ஒரு மிருதுவான காளானாகவும், கவரக்கூடிய பழுப்பு நிறமும் மற்றும் தண்டையும் அதோடு குடைப்பாகமும் கொண்டது. இதிலுள்ள குடைப்பாகமும் தண்டும் உண்ண கூடியது.
- சிப்பி காளான் மற்றும் மொட்டுக்காளான் ஆகியவற்றை ஒப்பிடும்போது இந்த காளான் அதிக வைக்கும் காலத்தையும் மேலும் பால் காளானை விட அதிக ஊட்டச்சத்து கொண்டுள்ளது.

## பயன்கள்

- இந்தக் காளானின் வளர்ச்சிக்கு 30-35°C வெப்ப நிலை போதும் என்பதால் வெப்பமண்டலபகுதிகளில் வளர வைக்க உகந்ததாகும்.
- இது அதிக வைக்கும் காலத்தை கொண்டுள்ளது.
- வைக்கும் காலத்தில் பழுப்பு நிறமாகி போவதில்லை
- கவர்ச்சியான பால் வெள்ளை மற்றும் பழுப்பு நிறம் உடையது.
- எளிதான வளர்ப்பு முறை மற்றும் சிப்பிக்காளானை ஒத்த மகசூல் தரக்கூடியது.

## வளர்க்கும் முறை

1. அடி மூலக்கூறு தயாரிப்பு
2. பை நிரப்பல் மற்றும் காளான் வித்து சேர்த்தல்
3. நுண்ணுயிர் நீக்கம் / நுண்கிருமி தொற்று நீக்கம்.
4. காளான் திசு வளர்ப்பு
5. மண் மேற்பூச்சு
6. காளான் வளர்ப்பு

## அடி மூலக்கூறு தயாரிப்பு



- ❖ பொதுவாக காளான் பாலிபுரப்பலின் பைகளில் நிரப்பப்பட்ட சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட வைக்கோலில் வளர்க்கப்படுகிறது
- ❖ வைகோலை 5-6 சென்டிமீட்டர் அளவிற்கு சிறு சிறு துண்டுகளாக்கி 2-3 மணி நேரம் நீரில் ஊற வைக்க வேண்டும். இதை செய்வதன் மூலம் வைக்கோலின் ஈரப்பதம் 65-70 % அளவிற்கு வரும்.
- ❖ மேலும் வைக்கோலின் மேல் உள்ள வேண்டாத அசுத்தங்களையும் நீக்குவதற்கு இந்த முறை உதவவும்.

## நுண்ணுயிர் நீக்கம்

பாதிக்கும் நுண்ணுயிர்களை நீக்கும் முறைக்கு தான் நுண்ணுயிர் நீக்கம் எனப்படும். இது இரண்டு வழிகளில் செய்யப்படுகிறது

### 1. சுடுநீரில் நுண்ணுயிர் நீக்கம்



- ❖ காய்ந்த மூலக்கூற்றை 80-85°C சூடான நீரில் இரண்டு மணி நேரம் மூழ்கி வைப்பதன் மூலம் நுண்ணுயிர் நீக்கம் செய்ய முடியும்.
- ❖ துண்டாக்கப்பட்ட வைகோலை முன்பே நீரில் ஊற வைக்காமல் நேரடியாக சுடுநீரில் போட முடியும்.
- ❖ நீரை சூடாக்குவது நுண்ணுயிர்நீக்க செயல் முடியும் வரை தொடர வேண்டும்

### 2. நீராவியால் நுண்ணுயிர் நீக்கம்



- சூடாக்கப்படும் நீராவி கொள்கலனில் இருந்து பெறப்படும் நீராவியை ஈரப்பதமான வைக்கோல் நிரப்பப்பட்ட கொள்கலனில் செலுத்துவது மூலம் அடி மூலக்கூறில் இருக்கும் நுண்ணுயிர்கள் ஒழிக்கப்படுகின்றன.
- வைக்கோல் கொள்கலனில் 60 -65° C ல் 4 மணி நேரமும் அல்லது 80° C ல் 2 மணி நேரமும் தொடர்ந்து வெப்பநிலை இருந்தால் முழுமையான நுண்ணுயிர் நீக்கம் சாத்தியமாகும்.

## நுண்கிருமி நீக்கம்

கேடு விளைவிக்கும் தொற்றுகிருமி முழுமையாக இந்த முறையில் நீக்க முடியும்.



- ❖ இந்த முறைக்கு வைக்கோல் 2-3 மணி நேரம் நீரில் ஊற வைக்கப்பட வேண்டும். ஊற வைக்கப்பட்ட வைக்கோல் சூரிய ஒளியில் ஒரு கம்பி வலை மேடையில் பரப்ப பட்டு ஈரப்பதம் 65% வரும் வரை அப்படியே உலர வேண்டும்.
- ❖ ஈரப்பதம் 65-70% உள்ள வைக்கோல் 1-2 கிலோ அளவிற்கு பாலிபுரப்பலின் பைகளில் நிரப்பப்பட வேண்டும். ஒரு இன்ச் விட்டம் உள்ள பி வி சி வளையம் பையின் முனையில் நுழைக்கப்பட்டு நீர் உறிஞ்சாத பருத்தி மூலம் வாய்ப்பகுதி மூடப்படுகிறது.



- ❖ ஒரு கிலோ பைகள் ஆட்டோகிளேவில் 121°C மற்றும் 15 பவுண்ட் அழுத்தத்தில் 20 நிமிடங்களும், 2 கிலோ பைகள் 30 நிமிடங்களும் நுண்கிருமி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

## பை நிரப்புதல் மற்றும் காளான் விதை சேர்ப்பு

### பை நிரப்புதல்



- ❖ பாலிபுரப்பலின் பைகள் (150 - 170 காஜ் தடிமன், 12 x 16 இன்ச் பை ஒரு கிலோவிற்கு, 14 x 18 இன்ச் 2 கிலோவிற்கு) தான் பால் காளானின் வைக்கோல் மூலக்கூறு தொற்று நீக்க முறைக்கு பொருத்தமான சிறந்த கொள்கலனாக பயன் படுகிறது.
- ❖ நுண்ணுயிர் நீக்க முறையில் தொற்றுநீக்கம் செய்யப்பட்ட வைக்கோல் பைகளில் நிரப்பப்பட்டு காளான் விதைகள் சேர்க்கப்படுகின்றன.
- ❖ பைகளில் வாய் பகுதி நீர் உறிஞ்சாத பருத்தி பஞ்சு மூடியால் மூடப்பட்டு பின்பு திசு வளர்ச்சிக்கு வைக்கப்படுகிறது.

## காளான் விதை சேர்ப்பு



- ❖ நுண்ணுயிர் நீக்கப்பட்ட வைக்கோல் பைகளில் காளான் விதைகள் அடுக்கு அடுக்காக சேர்க்கப்படுகின்றன.
- ❖ நுண்கிருமி நீக்கப்பட்ட வைக்கோல் நிரப்பப்பட்ட பைகளில் மேற்புறத்தில் காளான் விதைகள் துவங்கப்பட்டு பின்பு பைகளின் அடிப்புறம் வரை செல்ல கலக்கப்படுகிறது.

## காளான் திசு வளர்ப்பு



- ❖ காளான் விதை சேர்த்த பின்பு பாலிபுரப்பலின் பையில் பிவிசி வளையம் கொண்ட வாய்ப்பகுதி நீர் உறிஞ்சாத பருத்தி பஞ்சால் மூடப்படுகிறது
- ❖ குடிலின் வெப்பநிலை 21-28 °C என்ற அளவில் வைக்கப்படுகிறது (24-26 °C மிகத் தகுதியான வெப்பநிலை). இந்த நிலையில் நீர் மற்றும் வெளிச்சம் தேவையில்லை.

## மண் மேற்பூச்சு

- ❖ மண் மேற்பூச்சு போடுதல் என்பது நுண்கிருமி நீக்கப்பட்ட மண்ணை பை உள்ள வைக்கோல் மீது தூவுவது. காளான் மொட்டு உருவாவதை ஊக்குவித்து காளான் வளரும் போது அதன் அடித்தளத்திற்கு உறுதியளிக்கிறது.



- ❖ மணல் 20 % மற்றும் 60-70 % ஈரப்பதம் உள்ள மண் சுண்ணாம்பு பொடியுடன் (8%) கலந்து அதன் pH 7.5-8 அளவிற்கு வருமாறு செய்யப்படுகிறது.
- ❖ அடுத்து 60-65°C வெப்ப நிலையில் 2-4 மணி நேரமும் அல்லது 80°C ல் 1-2 மணி நேரமும் நுண்கிருமிநீக்கம் செய்யப்படுகிறது.
- ❖ காளான்திசுக்கள் முழுவதுமாக வளர்ந்த பைகள் காளான் வளர் குடிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு திறக்கப்படுகிறது.
- ❖ பாலிபுரப்பலின் தாள் கீழாக சுருட்டப்பட்டு வைக்கோல் மூலக்கூறுகள் சமன் செய்யப்படுகிறது. ஆறிய நுண்கிருமி நீக்கப்பட்ட மண் (2-3 செ மீ) சீராக தூவப்படுகிறது. மறுநாளில் இருந்து நீர் தெளிக்கப்படுகிறது.

## காளான் வளர்ப்பு

- ❖ மண் மேற்பூச்சு இட்ட பின்பு 10-15 நாட்களில் சிறு மொட்டு வளர ஆரம்பிக்கும்.
- ❖ இந்த நேரத்தில் வெப்பநிலை 28-35°C (30-32 °C மிகத் தகுதியான வெப்பநிலை), ஈரப்பதம் 80-85%, நல்ல காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் இருக்குமாறு செய்யப்படுகிறது.
- ❖ தெளிப்பான் மூலம் நீர்த்தெளிக்கப்படுகிறது ஆனால் அதிகமாக நீர் தெளிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ வெளிச்சம் (மங்கிய சூரிய வெளிச்சம் அல்லது மின்சார விளக்கு) 12 மணி நேரம் இருக்குமாறு செய்ய வேண்டும்.
- ❖ காளான் தொப்பி விட்டம் 5-7 செ மீ இருக்கும்போது அறுவடை செய்ய வேண்டும்.
- ❖ அறுவடைக்குப் பின் காளானின் அடித்தண்டு மற்றும் அதோடு ஒட்டிக் கொண்டிருக்கும் துகள்கள் ஆகியவற்றை வெட்டி நீக்க வேண்டும். காளானை அப்படியே அல்லது ஊறுகாய் செய்தும் சந்தை படுத்தலாம்.




பால் காளான் வளர்க்க விலை சகாயமான குடில்கள்

### 1. சூரிய மின்சார சக்தியுடனும் இயங்கும் காளான் வளர்க்கும் குடில்



இந்த குடில் ICAR-IIHR நிறுவனத்தால் 2018-19 ஆண்டில் வடிவமைக்கப்பட்டதி. இந்த குடிலை உபயோகப்படுத்தி கிராமம் மற்றும் நகரப்புற இடங்களில் காளானை வளர்க்க முடியும். காளான் வளர்க்க பயன்படும் கட்டிடங்களால் ஆன பண்ணையை விட இது விலை குறைந்த அமைப்பாகும்.